DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: S.T.C. No. 880/2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-8 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.ரேகா |
| Father's Name (or) Husband Name | : | க/பெ. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 06.06.2024

---

**முதல் விசாரணை**

1. நான் தற்போது எஸ்.பி.பட்டிணம் காவல்நிலையத்தில் இரண்டாம்நிலை பெண்காவலராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 08.09.2021ம் தேதி எஸ்.பி.பட்டிணம் காவல்நிலையத்தில் பாரா பொறுப்பில் பணியிலிருந்த போது 10.30 மணியளவில் மண்டலக்கோட்டைய சேர்ந்த தெரசாள் என்பவர் நிலையம் ஆஜராகி அளித்த மனுவை பெற்று நிலைய மனு எண்.156/2021 மனு ரசீது வழங்கி மனுவை விசாரணைக்காக சார்பு ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. 08.09.2021ம் தேதி 10.30 மணி முதல் 10.45 மணியளவில் மனுவை பெற்று மனு ரசீது வழங்கினேன். 08.09.2021ம் தேதி மனுவை சார்பு ஆய்வாளரான சுதர்சன் என்பவர் பார்வைக்கு வைத்தேன். எத்தனை மணிக்கு சார்பு ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன் என ஞாபகம் இல்லை. இது சம்பந்தமாக போலிசார் என்னை அன்றைய தினமே விசாரித்தார் எத்தனை மணிக்கு விசாரித்தார் என ஞாபகம் இல்லை.

2. நான் அளித்த மனு ரசீதுக்கு அன்றைய தினமே முதல் தகவல் அறிக்கையை சார்பு ஆய்வாளர் பதிவு செய்தார். அன்றைய தினமே எதிரி புகார் மனுவை காவல் நிலையத்தில் யாரிடம் அளித்தார் என்றால் நான் பெறவில்லை.

3. புகார்தாரர் எதிரியை அடித்து எதிரி மருத்துவமனைக்கு சென்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி தெரியாது. எனக்கு பணி நேரம் 08.00 முதல் 11.00 மணி வரை பணியில் இருந்தேன். அந்த நேரத்தில் என்னுடன் யார் பணியில் இருந்தார்கள் என எனக்கு ஞாபகம் இல்லை.

4. நான் மனு ரசீது வழங்கவில்லை என்றும் வழக்கிற்காக மனு ரசீது வழங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகார்மனுவை காவல் நிலையத்தில் வைத்து தான் எழுதப்பட்டதா என்றால் புகார்மனு எழுதி கொண்டு வந்தார்கள் அதை யார் எழுதினார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

5. புகார்தாரருடன் காவல் நிலையத்திற்கு யார் வந்தார்கள் என்றால் புகாராதரருடன் சில நபர்கள் வந்தார்கள் அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. காவல் நிலையத்திற்கும் மண்டலக்கோட்டைக்கும் சுமார் 10 கிலோமீட்டர் துாரம் இருக்கும். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான்.